**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**
**பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு – மார்ச் / ஏப்ரல்– 2024**
**சமூக அறிவியல் (தமிழ் வழி)**
**விடைக்குறிப்பு**

**மொத்த மதிப்பெண்கள்: 100**

**பகுதி –1**

| அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். | | 14x 1 = 14 | |
|---|---|---|---|
| **வினா எண்** | **குறியீடு** | **விடை** | **மதிப்பெண்** |
| 1. | (அ) | சேம்பர்லின் | 1 |
| 2. | (ஆ) | பதுங்குக் குழிப் போர்முறை | 1 |
| 3. | (அ) | மகாதேவ் கோவிந்த் ரானடே | 1 |
| 4. | (ஈ) | 1991 | 1 |
| 5. | (ஆ) | மிட்வே போர் | 1 |
| 6. | (ஈ) | வண்டல் மண் | 1 |
| 7. | (ஈ) | தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் | 1 |
| 8. | (ஆ) | வங்கக் கடல் | 1 |
| 9. | (இ) | 1872 | 1 |
| 10. | (ஆ) | இலையுதிர்க் காடுகள் | 1 |
| 11. | (இ) | இந்தியா மற்றும் சீனா | 1 |
| 12. | (அ) | முதலமைச்சர் | 1 |
| 13. | (ஈ) | ஜெனீவா | 1 |
| 14. | (இ) | தமிழ்நாடு | 1 |

**பகுதி–II**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண். 28 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் .** **10x2=20**

| **வினா எண்** | **விடை** | **மதிப்பெண்** |
|---|---|---|
| 15. | ❖ 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக்கப் பற்படைத்தளமான முத்துத் துறை முகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும் தாக்குதலைத் தொடுத்தன.<br>❖ இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும் போர்விமானங்களும் அழிக்கப்பட்டன.<br>❖ இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது. | 2 |

| | | |
|---|---|---|
| 16. | ❖ திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் நூற்பாலை தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி., சுப்பிரமணிய சிவாவின் தோளோடு தோள் நின்றார்..<br>❖ அதே சமயத்தில் பிபின் விடுதலை செய்யப்பட்டதை கொண்டாடுவதற்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்ததற்காக வ.உ.சியும் சிவாவும் கைது செய்யப்பட்டனர்.<br>❖ மக்கள் செல்வாக்கு பெற்ற இவ்விருதலைவர்களும் கைது செய்யப்பட்ட செய்திபரவியதில் திருநெல்வேலியில் கலகம் வெடித்தது.<br>❖ காவல்நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. | 2 |
| 17. | **டாலர் ஏகாதிபத்தியம்:** இச்சொல் தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக்கொள்ளவும், அமெரிக்கா பின்பற்றியக் கொள்கையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும். | 2 |
| 18. | ❖ பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார்.<br>❖ குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார்.<br>❖ பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பொறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார்.<br>❖ ."திருமணம் செய்து கொடுப்பது" எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களை பொருட்களாக நடத்துகின்றன என்றார்.<br>❖ அவைகளுக்கு மாற்றாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார். **(ஏதேனும் இரண்டு )** | 2 |
| 19. | ❖ உடன்கட்டை ஏறுதல் (சதி)<br>❖ குழந்தை திருமணம்<br>❖ பலதார மணம்<br>❖ விதவை மறுமணம் **(ஏதேனும் இரண்டு )** | 2 |
| 20. | ❖ டைட்டானியம் மற்றும் இரும்பு தாதுக்களால் கருப்பு நிறமாக உள்ளது<br>❖ கால்சியம், மக்னீசியம், கார்போனேட்டுகள், அதிக அளவிலான இரும்பு அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியன காணப்படுகின்றன.<br>❖ ஈரமாக இருக்கும் போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்டநேரம் தக்கவைத்துக் கொள்ளும் தன்மையையும் உடையது.<br>**(ஏதேனும் இரண்டு )** | 2 |
| 21. | கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் கடற்கரை சமவெளி உருவாக்கப்படுகிறது. | 2 |
| 22. | **பருவம்**<br>❖ சொர்ணவாரி (சித்திரைப்பட்டம்)<br>❖ சம்பா (ஆடிப்பட்டம்)<br>❖ நவரை | 2 |

| | | |
|---|---|---|
| 23. | ❖ தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வட இந்தியாவின் வெப்பநிலையானது 46°C வரை உயருகிறது.<br>❖ இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் 'பருவமழை வெடிப்பு' எனப்படுகிறது. | 2 |
| 24. | இரும்பு எஃகு, வெளுக்கும் தூள், பூச்சிக் கொல்லிகள், வண்ணப்பூச்சிகள், மின் கலன்கள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு மாங்கனீசு பயன்படுகின்றது. | 2 |
| 25. | ❖ குடியரசுத்தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.<br>❖ தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற இரு அவை உறுப்பினர்கள், மாநில, யூனியன் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்கள். | 1<br>1 |
| 26. | ❖ பாகிஸ்தான்<br>❖ ஆப்கானிஸ்தான்<br>❖ சீனா<br>❖ நேபாளம்<br>❖ பூடான்<br>❖ வங்காளதேசம்<br>❖ மியான்மர்<br>❖ இலங்கை<br>❖ மாலத்தீவு<br>**(ஏதேனும் நான்கு)** | 2 |
| 27. | ❖ ஒரு சிறந்த பொருளாதாரம், மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது.<br>❖ வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளது.<br>❖ உலகமயமாக்கல் வர்த்தகத்தை வேகமாக அதிகரித்து அதிக மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.<br>❖ புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>❖ உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்.<br>❖ இது பண்டங்களை தடையற்றதாகவும், தாராளமாக அதிகரிக்கவும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிக்கவும் உதவுகின்றன. **(ஏதேனும் இரண்டு)** | 2 |
| 28. | சென்னை பெரிய அளவிலான வாகனத் தொழில்துறை தளமாக இருப்பதால் ஆசியாவின் டெட்ராய்ட் என்ற அழைக்கப்படுகிறது. | 2 |

**பகுதி– III**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினா எண்.42 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 10×5=50**

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 29. | i. முத்துலட்சுமி அம்மையார்<br>ii. சோலைக்கரடு<br>iii. 6 ஆண்டுகள்<br>iv. கெஸ்டபோ<br>v. வேளாண்மை | 1<br>1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 30. | ❖ 1920–1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது.<br>❖ மூன்று பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் சங்கம் வெற்றி பெற்றது.<br>❖ 1920இல் ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது.<br>❖ பன்னாட்டுச்சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது எனத் தீர்ப்பளித்தது.<br>❖ போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலைசைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்டு, பிரச்சனையைத் தீர்த்துவைக்கச் சங்கம் அழைக்கப்பட்ட போது அப்பிரச்சனையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தது.<br>❖ 1925 இல் மூன்றாவது பிரச்சனை கிரீஸ், பல்கேரியா நாடுகளிடையே ஏற்பட்டதாகும்.<br>❖ கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்த போது பன்னாட்டுச் சங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.<br>❖ ஆகவே 1925இல் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்ற வரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது. | 5 |
| 31. | **வங்கப் பிரிவினை :**<br>❖ 1905 ஆம் ஆண்டு – கர்சன் – வங்களாம் பிரிவினை.<br>**முஸ்லீம் லீக் கட்சி :**<br>❖ 1906 ஆம் ஆண்டு – முஸ்லீம் லீக் கட்சி –<br>**முஸ்லும்களுக்கு தனித் தொகுதி கோரிக்கை :**<br>❖ 1909 ஆம் ஆண்டு மிண்டோ – மார்லி சீர்திருத்தச்சட்டம் – தனித்தொகுதிகள் வழங்கப்பட்டன.<br>**முஸ்லிம்களுக்கு தனிநாடு கோரிக்கை :**<br>❖ 1940ஆம் ஆண்டு – லாகூர் மாநாடு – தனிநாடு கோரிக்கை – ஜின்னா.<br>**சிம்லா மாநாடு :**<br>❖ 1946 ஆகஸ்டு 16 நாள் இந்து முஸ்லிம் மோதல்.<br>**இடைக்கால அரசு :**<br>❖ மவுண்ட் பேட்டன் திட்டம் – இந்தியா பாகிஸ்தான் என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டன – இந்தியா பிரிக்கப்பட்டது.<br>**(ஏதேனும் ஐந்து)** | 5 |

32. அ)

i. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்

| வ. எண் | வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | கனிமம் சார்ந்த தொழிலகங்கள் |
|---|---|---|
| 1 | இத்தொழிலகங்கள் வேளாண் துறையிலிருந்து மூலப் பொருள்களை பெறுகின்றன | இத்தொழிற்சாலைகள் உலோக மற்றும் உலோகமற்ற மூலப்பொருள்களைப் பயன்படுத்துகின்றன. |
| 2 | தொழிலாளர்களைச் சார்ந்தது. | இயந்திரங்களைச் சார்ந்தது |
| 3 | எ.கா: கரும்பு, பருத்தி ஆலைகள் | எ.கா: இரும்பு எஃகு, சிமென்ட் தொழிற்சாலைகள் |

(ஏதேனும் இரண்டு) — 2

ii. உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்.

| வ.எண் | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|
| 1 | ஒரு நாட்டில் எல்லைக்குள் நடைபெறும் வணிகம் | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் |
| 2 | இவ்வணிக முறையில் உள்நாட்டு நாணயம் பயன்படுத்தப்படுகிறது. | இவ்வணிக முறையில் அந்நியநாட்டு பணம் பயன்படுத்தப்படுகிறது. |
| 3 | நிலவழி போக்குவரத்து | கடல் வழி மற்றும் வான்வழி போக்குவரத்து |

(ஏதேனும் இரண்டு) — 2

ஆ) காரணம் கூறுக.

வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.

வட இந்திய ஆறுகள் இமயமலைகளில் உற்பத்தியாகி மழைக்காலங்களிலும், பனி உருகுவதால் கோடை காலங்களிலும் நீரைப் பெறுவதால் வற்றாத ஆறுகளாக உள்ளன.. — 1

33. I. சமத்துவ உரிமை

- ❖ சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

II. சுதந்திர உரிமை

- ❖ பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம்.

III. சுரண்டலுக்கெதிரான உரிமை

- ❖ தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் குழந்தை தொழிளாலர் முறையைத் தடுத்தல்.

IV. சமயச்சார்பு உரிமை

- ❖ எந்த மதத்தையும் பின்பற்றவும் பரப்புவதற்குமான உரிமை

V. கல்வி , கலாச்சார உரிமை

- ❖ சிறுபான்மையினரின் மொழி மற்றும் கல்வி நிறுவனங்களை பராமரிக்கும் உரிமை.

— 5

| | | |
|---|---|---|
| | <u>**VI.. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை**</u><br>❖ தனிநபர்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கும் போது நீதிமன்றத்தை அணுகும் உரிமை. | |
| 34. | இந்தியாவின் பெரும் அரணாக உள்ள இமயமலையை மூன்று பெரும் உட்பிரிவுகளாக பிரிக்கலாம்.<br>**1. ட்ரான்ஸ் இமயமலைகள் (மேற்குஇமயமலைகள் )**<br>❖ இதன் பரப்பளவு திபெத்தில் அதிகமாக இருப்பதால் இவை "திபெத்தியன் இமயமலை" எனவும் அழைக்கப்படுகிறது.<br>**2. இமயமலைகள்**<br>❖ இது பலமலைத் தொடர்களை உள்ளடக்கியது.<br>❖ இவை மூன்று பிரிவுகள்<br>▪ இமாத்ரி<br>▪ இமாச்சல்<br>▪ சிவாலிக்<br>**3. கிழக்கு இமயமலை / பூர்வாஞ்சல்குன்றுகள்**<br>❖ இது வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளது.<br><u>**இமயமலையின் முக்கியத்துவம்**</u><br>❖ தென்மேற்கு பருவக்காற்றைத் தடுத்து வடஇந்திய பகுதிக்கு கனமழையைக் கொடுக்கிறது.<br>❖ இந்திய துணைக் கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.<br>❖ வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. (எ.கா) சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் பிற ஆறுகள்.<br>❖ இயற்கை அழகின் காரணமாக வடக்கு மலைகள் சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.<br>❖ பலகோடை வாழிடங்களும், புனிததலங்களான அமர்நாத், கேதர்நாத், மற்றும் பத்ரிநாத்கோயில்களும் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.<br>❖ வனப்பொருட்கள் சார்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை அளிக்கிறது.<br>❖ மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்காற்றை தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாதுகாக்கிறது.<br>❖ இமயமலை பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றவை.<br>**(ஏதேனும் நான்கு)** | 2<br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>3 |
| 35. | ❖ கிராமப்புற சமுதாயம் நகர்புற சமுதாயமாக மாற்றமடைவதையே நகரமயமாக்கம் என்கிறோம்.<br><u>**அதன் சிக்கல்கள்**</u><br>❖ நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.<br>❖ நகர்புறங்களில் மக்கள் நெருக்கடியை தோற்றுவிக்கிறது.<br>❖ நகர்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.<br>❖ குடிசைப்பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.<br>❖ போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.<br>❖ குடிநீ ர்பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.<br>❖ வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன. | 1 |

| | | |
|---|---|---|
| | ❖ திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்கிறது.<br>❖ குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றன.<br>**(ஏதேனும் நான்கு)** | **4** |
| 36. | ❖ மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தியாலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படுகிறது.<br>❖ மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றது.<br>❖ தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையிலான பருத்தி நெசவாலைகள் உள்ளன.<br>❖ இதனால் கோயம்புத்தூர் 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது.<br>❖ தமிழ்நாட்டில் உள்ள 435 நெசவாலைகளில் 200 நெசவாலைகள் கோயம்புத்தூர் பகுதியில் அமைந்துள்ளது.<br><br>❖ ஈரோடு, திருப்பூர்,கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, சேலம் மற்றும் விருதுநகர் ஆகியன மாநிலத்தின் பிற முக்கிய நெசவாலை நகரங்களாகும். | **3**<br><br><br><br><br><br><br><br><br><br><br><br>**2** |
| 37. | **ஆங்கிலேயேரின் இணைப்புக் கொள்கை:**<br>**1. மேலாதிக்கக் கொள்கை:**<br>❖ ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்களைக் கொண்ட உயர் அமைப்பாகக் கருதினர். உள்நாட்டு ஆட்சியாளர்கள் திறனற்றவர் என்ற அடிப்படையில் புதிய நிலப்பதிகள் இணைக்கப்பட்டன.<br>**2. வாரிசு இழப்புக் கொள்கை:**<br>❖ வாரிசு இழப்புக் கொள்கை மூலம் சதாரா, ஜான்சி, நாக்பூர், சம்பல்பூர், பஞ்சாபின் கீழ் பகுதிகள் இணைக்கப்பட்டன.<br>**இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத்தன்மை இல்லாதது:**<br>❖ இந்திய சிப்பாய்கள் மதக்குறியீடுகளை நெற்றியில் அணிவதற்கும், தாடி வைத்துக் கொள்வதற்கும், தடை விதிக்கப்பட்டது.<br>❖ தலைப்பாகைகளுக்குப் பதிலாக வட்ட வடிவிலான தொப்பிகளை அணியுமாறு கட்டளையிடப்பட்டனர். இதை சிப்பாய்கள் எதிர்த்தனர்.<br>❖ இந்திய சிப்பாய்கள் கடல் கடந்து சென்றால் தங்கள் சாதியை இழக்க நேரிடும் என்று கருதி கடல் கடந்து செல்ல மறுத்தனர்.<br>❖ ஆங்கில சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் இந்திய சிப்பாய்களின் ஊதியம் மிகக் குறைவாக இருந்தது.<br>❖ இந்திய சிப்பாய்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டதோடு, மூத்த படையினரால் அவமதிக்கப்பட்டனர். | **5** |

| | | |
|---|---|---|
| | ➢ **என்ஃபீல்டு துப்பாக்கி:**<br>புதிய என்ஃபீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் பற்றிய வத்ந்திகள் புரட்சிக்கு வித்திட்டன. | |
| 38. | ❖ நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு<br>❖ நாட்டின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தத்துவம் அடிப்படையிலானவை<br>❖ இயற்கை வளங்கள்<br>❖ பொருளாதார வளர்ச்சியின் அவசியம்<br>❖ அரசியல் நிலைத் தன்மை மற்றும் அரசாங்க அமைப்பு<br>❖ அமைதிக்கான அவசியம், ஆயுதக் குறைப்பு, அணு ஆயுதப்பெருக்கத்தடை<br>❖ இராணுவ வலிமை<br>❖ சர்வதேச சூழ்நிலை **(ஏதேனும் ஐந்து)** | 5 |
| 39. | ➢ **செலவினமுறை**<br>❖ இந்த முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்டபணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையேயாகும்.<br>Y = C + I+G+ (X - M)<br>**வருமானமுறை**<br>❖ பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்த முறை கூறுகிறது.<br>❖ வருமான முறையில் GDPஐ கணக்கிடும் போது<br>வருமானம் = கூலி+வாரம்+வட்டி+லாபம்.<br>➢ **மதிப்புகூட்டுமுறை**<br>❖ மதிப்புக் கூட்டு முறையில் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலைப் பண்டங்களின் மதிப்பை சேர்க்கும்பொழுது உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.<br>இடைநிலைப் பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு<br>டீ தூள் + பால் + சர்க்கரை = தேநீர் | **கணக்கிடும் முறை**<br>2 மதிப்பெண்<br><br>**விளக்கம்**<br>3 மதிப்பெண் |
| 40. | ❖ கருப்புபணம் என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணமாகும்.<br>❖ வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் "கருப்புபணம்" என்று அழைக்கப்படுகிறது.<br>➢ **கருப்பு பணத்திற்கான காரணங்கள்**<br>கருப்பு பணத்திற்கு பல காரணங்கள் அடையாளம் காணப்படுகின்றன.<br>❖ **அவை**<br>• பண்டங்கள் பற்றாக்குறை<br>• உரிமம் பெறும் முறை | 2<br><br>**3** |

| | | |
|---|---|---|
| | • தொழில்துறையின் பங்கு<br>• கடத்தல்<br>• வரியின் அமைப்பு | |
| 41. | **காலக்கோடு வரைக (1920 முதல் 1940 வரை)** | 5 |

| | | |
|---|---|---|
| 1920 | – | கிளாபத் இயக்கம் / ஒத்துழையாமை இயக்கம்/ பன்னாட்டு சங்கம் தோற்றம் |
| 1922 | – | சௌரி சௌரா சம்பவம் / முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு |
| 1923 | – | சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றம் |
| 1927 | – | சைமன் குழு நியமனம்/வியட்நாம் தேசியக் கட்சி உதயம் |
| 1928 | – | மோதிலால் நேரு அறிக்கை |
| 1929 | – | லாகூர் காங்கிரஸ் மாநாடு / பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை |
| 1930 | – | உப்பு சத்தியாகிரகம் / முதல் வட்டமேசை மாநாடு |
| 1931 | – | காந்தி – இர்வின் ஒப்பந்தம் / இரண்டாம் வட்டமேசை மாநாடு |
| 1932 | – | வகுப்புவாரி பிரதிநிதித்துவம் / பூனா ஒப்பந்தம் / மூன்றாம் வட்டமேசை மாநாடு |
| 1933 | – | ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல் |
| 1934 | – | நீண்ட பயணம் |
| 1935 | – | இந்திய அரசு சட்டம்/ முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது |
| 1937 | – | மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்படுதல் |
| 1938 | – | மியூனிச் உடன்படிக்கை |
| 1939 | – | இரண்டாம் உலகப்போர் தொடக்கம் |
| 1940 | | ஆகஸ்ட் நன்கொடை / தனிநபர் சத்தியாகிரகம் / பிரிட்டன் போர் |

**(ஏதேனும் ஐந்து மட்டும்)**

42.




(5 மதிப்பெண்கள்)

## பகுதி– IV

**அனைத்து வினாக்களுக்கும்விடையளிக்கவும்** **2×8=16**


| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 43 (அ) | முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்கள்:<br>➢ **ஐரோப்பிய நாடுகளின் அணிசேர்க்கைகளும் எதிர் அணிசேர்க்கைகளும்**<br>❖ 1900இல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.<br>❖ ஒரு முகாம்மைய நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய – ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது.<br>❖ இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு நாடுகளாக உருவாக்கப்பட்டது. | 1 |
| | ➢ **வன்முறை சார்ந்த தேசியம்**<br>❖ தேசப்பற்றின் வளர்ச்சியோடு "எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்" என்ற மனப்பாங்கும் வளர்ந்தது.<br>❖ இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று.<br>❖ பிரான்சின் அதிதீவிரப்பற்று.<br>❖ ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று. | 1 |
| | ➢ **ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு**<br>❖ ஜெர்மன் பேரரசரான இரண்டாம் கெய்சர்வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார்.<br>❖ ஜெர்மனியின் கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது .<br>❖ ஆகவே இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்குமிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது. | 1 |
| | ➢ **பால்கன் போர்கள்**<br>❖ முதல் பால்கன் போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டது.<br>❖ இலண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது.<br>❖ மாசிடோனியாவைப் பிரித்தளித்ததில் செர்பியாவையும் கிரீஸையும் பல்கேரியாதாக்கியது.<br>❖ 1913 ஆகஸ்டு திங்களில் கையெழுத்திடப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையோடு இரண்டாம்பால்கன் போர் முடிவடைந்தது. | 2 |
| | ➢ **உடனடிக் காரணம்**<br>❖ பாஸ்னியாவிலுள்ள செராஜிவோ என்னுமிடத்தில் 1914 ஜூன்28ஆம் நாள் ஆஸ்திரிய இளவரசர் பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் என்ற பாஸ்னிய செர்பியனால் கொலைசெய்யப்பட்டார்.<br>❖ இதுவே முதல் உலகப்போருக்கு உடனடிக் காரணமாயிற்று. | 3 |
| | **(அல்லது)** | |

| | | |
|---|---|---|
| 43 (ஆ) | ❖ கட்டபொம்மன் தனது 30 வது வயதில் பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக பொறுப்பேற்றார்.<br>❖ வரி வசூலிக்கும் உரிமை பெற்றிருந்த ஆங்கிலேயர்கள் பாளையக்காரர்களை அவமானப்படுத்தியதோடு, வரி வசூலிக்க படையினை பயன்படுத்தினர். இதனால் ஆங்கிலேயருக்கும் கட்பொம்மனுக்கும் இடையே பெரும் பகை ஏற்பட்டது.<br>❖ ஆட்சியர் ஜாக்சன் இராமநாதபுரத்தில் தன்னை வந்து சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு ஆணை பிறப்பித்தார்.<br>❖ கட்ட பொம்மன் மதராஸ் ஆட்சிக்குழுவிடம் தான் ஜாக்சனால் அவமானப்படுத்தப்பட்டது பற்றி கூறினார்.<br>❖ கட்டபொம்மன் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்த குழு ஜாக்சனை நிரந்தரப் பணி நீக்கம் செய்தது.<br>❖ மருதுபாண்டியர் தென்னிந்தியக் கூட்டமைப்பை ஏற்படுத்தினார். | 3 |
| | ❖ ஆங்கிலேயரின் விருப்பத்திற்கு மாறாக கட்டபொம்மன் இக்கூட்டமைப்பில் இணைந்தார்.<br>❖ மேலும், சில பாளையக்காரர்களை தங்களோடு இணைக்க முயன்றார். சிவகிரி பாளையக்காரர் இதற்க மறுத்ததால், கட்டபொம்மன் சிவகிரி நோக்கிப் படையெடுத்தார். இதைப் பெரும் சவலாகக் கருதினர் ஆங்கிலேயர்கள் .<br>❖ 1799 செப்டம்பர் 1 அன்று கட்டபொம்மனைச் சரணடையக் கோரிய நிபந்தனை வழங்கப்பட்டது. கட்டபொம்மனின் பிடிகொடுக்கதாத பதிலால் மேஜர் பானெர்மென் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைத் தாக்கினார். | 3 |
| | ❖ கட்டபொம்மன் புதுக்கோட்டைக்குத் தப்பிச் சென்றார்.<br>❖ பிரிட்டிஷார் கட்டபொம்மன், தலைக்கு ஒரு வெகுமதியை நிர்ணயித்தார்.<br>❖ இறுதியில் துரோகத்தினால் கட்டபொம்மன் பிடிபட்டார்.<br>❖ தன்மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றங்களையும் கட்டபொம்மன் ஒப்புகை கொண்டார்<br>❖ இறுதியில் கயத்தாறு என்னுமிடத்தில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். | 2 |

| | |
|---|---|
| 44 (அ) | <br>**(8 மதிப்பெண்கள்)** |

**(அல்லது)**

**44 (ஆ)**




**(8 மதிப்பெண்கள்)**